1973 நவம்பர் 26]

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது மாவட்ட அளவில் இல்லாமல் பின்தங்கிய பகுதி என்பதாக வட்ட அளவில் பார்க்க வேண்டுமென்று சொல்லியிருப்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்த அடிப்படையில் மிகவும் பின்தங்கிய திருத்தணி, பொன்னேரி வட்டத்தையும் அதில் சேர்க்க அறிவிப்புச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது செங்கல்பட்டு மாவட்ட உறுப்பினருடைய நீண்டநாள் குறை, கோரிக்கையாகும். அதில் உண்மை இருப்பதாகவே அறிகிறோம். என்றாலும் செங்கல்பட்டு மாவட்டம் என்பதாக சென்னையைச் சுற்றியுள்ள பகுதியில் தொழில்துறை வளர்ச்சி மிகவும் இருப்பதால் அவை இந்தத் திட்டத்திற்குள் வரவில்லை. எனினும் திருத்தணி பகுதி, இன்னும் உறுப்பினர் ராஜகோபால் பகுதி பிற்பட்டவையாக இருக்கத்தான் செய்கின்றன.

திருச்சிராப்பள்ளி மாவட்ட நூற்பாலையில் நெசவுப்பகுதி

*** 403 வின—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

அறவாக்குறிச்சி தொகுதியிலுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் நெசவுப்பகுதி (weaving) -யையும் ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, அறவாக்குறிச்சி மிகவும் பிற்பட்ட பகுதி, அங்கே உள்ள ஒரே ஒரு ஆலை, அதுதான். அதில் மேலும் வேலைவாய்ப்புத்தர வசதி அளிக்கிற வகையில், கொஞ்சம் இரக்கத்துடன் அதில் நெசவுத் தொழிலையும் இணைக்க மறுபரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த நூற்பாலையில் 12,500 ஸ்பிண்டில்கள் இருக்கின்றன. அவற்றை 25 ஆயிரம் ஆக்க வழி வகுத்திருக்கிறோம். அந்த ஆலையில் நெசவுத் தொழிலைக் கொண்டு வருவது கூட்டுறவுக்கே விரோதமானதாகும். காரணம் கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் உற்பத்தி செய்து கொடுப்பதற்காகவே

அது கூட்டுறவுத்துறையில் ஏற்படுத்தப்பட்டது. மேலும் அங்கே 20, 40 கவுண்டுகள் தான் உற்பத்தி செய்கிறோம். அங்கே நெசவுத் தொழிலைக்கொண்டுவருவது கூட்டுறவுத் துறையைப் பாதிக்கும்.

Visit of Trade Mission to Tamil Nadu

* 404 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether a team of Businessmen led by Mr. Noel Burne, visited this State around 12th March 1973;

(*b*) if so, whether they held any discussions with the Hon-Minister; and

(*c*) the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) & (உ) தூதுக்குழுவின் தலைவர் திரு. நோயல் பர்ன் என்பவரும் பர்மிங்காம் தொழில் வணிகத்துறை கழகத்தின் செயலாளரும் என்னைச் சந்தித்துப் பேசினர். பேச்சு வார்த்தைகள் பொதுப்படையான முறையில் அமைந்திருந்தது.

THIRU N. DENNIS : Sir, may I know the places they had visited in the State other than the Madras City and whether they had made any suggestions of common interest to the Stae ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாக இப்படி வெளி நாட்டில் இருந்து வருபவர்கள் பல மாநிலங்களுக்குச் சென்று அங்கேயுள்ள தொழில் வாய்ப்புகளையும், எதிர்காலத்தில் டெக்னிகல் கொலாபரேஷன் மூலமாக புதியதாக என்ன என்ன தொழில்களை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்பதைப்பற்றியும் பரிசீலனை செய்கிறார்கள். இங்கே வேறு எதுவும் குறிப்பிட்டுப் பேசப்பட வில்லை.

கோவை மாவட்டத்தில் நிலப்பட்டாக்கள் வழங்கல்

* **405 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள புறம்போக்கு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?